# இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம்

**ஜெருசலேம், நவ. 24:** போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, இஸ்ரேல், தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த 25 பிணைக் கைதிகளை ஹமாஸ் ஆயுதப் படையினர் வெள்ளிக்கிழமை விடுதலை செய்தனர்.

இதில், இஸ்ரேலின் 13, தாய்லாந்தின் 12 பிணைக் கைதிகளும் அடங்குவர்.

47 நாள்களாக நடைபெற்று வரும் போரை 4 நாள்கள் தற்காலிகமாக நிறுத்த இஸ்ரேல், ஹமாஸ் படையினர் இடையே கடந்த புதன்கிழமை (நவ. 22) உடன்படிக்கை ஏற்பட்டது. மேலும், இருதரப்பினரும் கைதிகளை பரஸ்பரம் விடுவிக்கவும், காஸாவில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்கவும் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

பாலஸ்தீனத்தின் காஸா முனைப் பகுதியிலிருந்து கடந்த 2005-ஆம் ஆண்டு இஸ்ரேல் வெளியேறியதையடுத்து, ஹமாஸ் அமைப்பினர் அங்கு ஆட்சியைக் கைப்பற்றினர். ஹமாஸ் படையினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வந்தது.

கடந்த அக். 7-ஆம் தேதி, பாலஸ்தீனத்தின் காஸா முனைப் பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் 5,000 ராக்கெட் குண்டுகளை வீசி திடீர் பலமுனைத் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 இஸ்ரேலியர் உயிரிழந்தனர். அப்போது, இஸ்ரேலில் இருந்து சுமார் 240 பேரைப் பிணைக் கைதிகளாக ஹமாஸ் படையினர் சிறை பிடித்துச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து, ஹமாஸ் படையினருக்கு பதிலடி தரவும், பிணைக் கைதிகளை மீட்கவும் காஸா மீது தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியது. இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 13,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் 2,700 பேரைக் காணவில்லை; அவர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கக் கூடும் என்றும் காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

இஸ்ரேல் ராணுவத்தின் தீவிரத் தாக்குதலால், காஸாவின் மொத்த மக்கள்தொகையான 23 லட்சம் பேரில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள், தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி தெற்குப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளை விடுவித்தால், பிணைக் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யத் தயார் என்று ஹமாஸ் படை தெரிவித்தது.

இதுகுறித்து ஆலோசிக்க இஸ்ரேலில் உள்ள டெல் அவிவ் நகரில் அந்நாட்டு அமைச்சரவைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு கிடைத்த பெரும்பான்மை ஆதரவைத் தொடர்ந்து, தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கைக்கு இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

தங்களிடம் உள்ள பிணைக் கைதிகளில் 50 பேரை ஹமாஸ் படையினரும், அதற்கு பதிலாக தம்மிடம் உள்ள 150 பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக்கொண்டன.

இதையடுத்து, இஸ்ரேல், ஹமாஸ் படையினர் இடையே தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு புதன்கிழமை உடன்படிக்கை ஏற்பட்டது.

இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் மேற்கொண்டன.

இஸ்ரேல் நாட்டுச் சட்டப்படி, கைதிகளை விடுவிப்பதில் மக்களுக்கு ஆட்சேபம் இருந்தால் வழக்குத் தொடுக்க அவர்களுக்கு 24 மணி நேரம் அவகாசம் அளிக்க வேண்டும். இஸ்ரேல் உச்சநீதிமன்றத்தில் பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க மக்கள் யாரும் வழக்குத் தொடுக்காததால் கைதிகள் பரிமாற்றம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதனிடையே, 4 நாள் போர் நிறுத்தம் வியாழக்கிழமை நள்ளிரவில் தொடங்கியது. இதையொட்டி, இருதரப்பும் தாக்குதல்களில் ஈடுபடவில்லை.

**25 பிணைக் கைதிகள் விடுவிப்பு:** காஸா முனைப் பகுதியில் கடந்த 7 வாரங்களாக சிறைப் பிடித்து வைக்கப்பட்டிருந்த 13 இஸ்ரேலியர்கள், 12 தாய்லாந்து நாட்டவர் என 25 பிணைக் கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவித்தனர். செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட 13 இஸ்ரேலியர்கள், எகிப்து வழியாக இஸ்ரேல் திரும்பினர். காஸாவைவிட்டு ராஃபா எல்லை வழியாக வெளியேறிய தாய்லாந்து நாட்டவர்கள், ஹட்செரிம் விமானப் படைத்தளம் மூலம் இஸ்ரேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்ட செய்தி வெளியானதும், நகர மையப் பகுதிகளில் திரளாக கூடிய இஸ்ரேலியர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

## 25 பிணைக் கைதிகள் விடுவிப்பு



போர் நிறுத்தத்தையடுத்து, வடக்கு காஸாவுக்கு திரும்பும் பாலஸ்தீனர்கள்.

## 39 பாலஸ்தீன கைதிகள் விடுதலை

இஸ்ரேல் தரப்பில் கல்வீச்சு போன்ற சிறு குற்றங்களில் ஈடுபட்ட சிறுவர்கள், பெண்கள் உள்பட 39 பாலஸ்தீன சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். பாலஸ்தீன கைதிகளை வரவேற்க சிறைவளாகத்தில் காத்திருந்த பாலஸ்தீனர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டு கலைக்கப்பட்டனர்.

## அமைதி தொடருமா?

போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது, மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நம்பிக்கையை அளித்துள்ளதாக அண்டை நாடுகள் மகிழ்ச்சி தெரிவித்தன. அதேவேளையில், போர் நிறுத்தம் நிறைவடைந்ததும், மேலும் 2 மாதங்களுக்கு தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படும் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யாயாவ் காலன்ட் உறுதிப்பட தெரிவித்துள்ளார். போர் நிறுத்தத்தையொட்டி வடக்கு காஸாவில் உள்ள தங்களின் வீடுகளை நோக்கி மக்கள் சிலர் செல்லத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து, வடக்குப் பகுதிக்கு யாரும் திரும்ப வேண்டாம் என தெற்கு காஸாவில் உள்ள மக்களுக்கு இஸ்ரேல் ராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.

## காஸா போர்.. முக்கிய திருப்பங்கள்

**அக். 7:** இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை ஹமாஸ் அமைப்பினர் வீசினர். 240 பேரை பிணைக் கைதிகளாக பிடித்து சென்றனர்.

**அக். 9:** காஸாவில் குடிநீர், உணவு, மின்சாரம், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு இஸ்ரேல் தடை விதித்தது.

**அக். 17:** காஸாவின் அல்-அஹ்லீ மருத்துவமனையில் நடத்தப்பட்ட தாக்குதலில் 471 பேர் உயிரிழந்தனர்.

**அக். 20:** அமெரிக்காவைச் சேர்ந்த தாய், மகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். ஒரு நாள் கழித்து 85 மற்றும் 79 வயதான 2 இஸ்ரேலிய மூதாட்டிகள் விடுவிக்கப்பட்டனர்.

**அக். 28:** காஸாவுக்குள் தரைவழித் தாக்குதலை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்தார்.

**அக். 30:** ராணுவ வீராங்கனையை ஹமாஸிடமிருந்து மீட்டது இஸ்ரேல்.

**நவ. 1:** கத்தாரின் மத்தியஸ்தத்தின்கீழ், வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றவர்கள் எகிப்து வழியாக வெளியேற முதல்முறையாக அனுமதிக்கப்பட்டனர்.

**நவ. 22:** கத்தார் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 4 நாள் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள இஸ்ரேலும், 50 பிணைக்கைதிகளை விடுவிக்க ஹமாஸ் அமைப்பும் ஒப்புக்கொண்டன.

## அனைவரையும் மீட்போம்: நெதன்யாகு



பிணைக் கைதிகளை வரவேற்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், 'பிணைக் கைதிகள் அனைவரையும் மீட்பது போரின் குறிக்கோள்களில் ஒன்றாகும். அனைத்து குறிகோள்களிலும் வெற்றிப் பெறுவதில் உறுதியாக இருக்கிறோம்' என்றார்.

# தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் 'ஸ்டார்ட் அப் தமிழா': விரைவில் நேர்காணல்

## அமைச்சர் தா.மோ.அன்பரசன்

**சென்னை, நவ24:** தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் 'ஸ்டார்ட் அப் தமிழா' நிகழ்ச்சிக்கு அனைத்து மாவட்டங்களிலும் விரைவில் நேர்காணல் நடத்தப்படும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்.

தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையிலும், தொழில்முனைவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் 'ஸ்டார்ட் அப் தமிழா' எனும் தொலைக்காட்சி நிகழ்ச்சியையும், அதற்குப் பதிவு செய்வதற்கான www.startupthamizha.tv -எனும் இணையதளத்தையும் அமைச்சர் தா.மோ. அன்பரசன் சென்னை ஐஐடி வளாகத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் முகமை நிறுவனமான 'ஸ்டார்ட் அப் டிஎன்' மூலம் மேற்கொள்ளப்படும் 'ஸ்டார்ட் அப் தமிழா' திட்டத்தில் பல்வேறு முதலீட்டாளர்கள் ரூ.200 கோடி முதலீடு செய்துள்ளனர். இதன் மூலம் சிறந்த 50 தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலீட்டாளர்களின் வழிகாட்டுதலைப் பெறுவர்.



இது குறித்து அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசியது: தமிழ்நாட்டின் அனைத்துமாவட்டங்களிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, புதிய தொழில்முனைவோர்களை உருவாக்கி, அதிக வேலைவாய்ப்பை வழங்குவதில் 'எம்எஸ்எம்இ' துறை முனைப்புடன் செயல்படுகிறது. இதற்கு அடித்தளமாக விளங்குவது ஸ்டார்ட் அப் நிறுவனங்கள்.

தமிழ்நாட்டில் உள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தகுந்த சூழலை அமைத்து, தொழில் துறையில் தமிழ்நாட்டை மேம்படுத்தும் வகையில் 'ஸ்டார்ட் அப் தமிழ்நாடு' எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2021 - மார்ச் வரை சுமார் 2,300 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது 7,400-க்கும் அதிமாக உயர்ந்துள்ளது.

இளைஞர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கும் வகையில் இது போன்ற நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது. மூன்று கட்டங்களாக நடத்தப்படும் நிகழ்ச்சிக்கு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விரைவில் நேர்காணல்கள் நடத்தப்பட உள்ளன என்றார் அவர்.

நிகழ்ச்சியில், எம்எஸ்எம்இ அரசு செயலர் அர்ச்சனா பட்நாயக், 'ஸ்டார்ட் அப் டிஎன்' தலைமைச் செயல் அதிகாரி சிவராஜா ராமநாதன், ரிபெக்ஸ் நிறுவனத் தலைவர் தினேஷ்குமார் அகர்வால், பான்-டெக் நிறுவனத் தலைவர் பிரேம் குமார், தைரோ கேர் நிறுவனத் தலைவர் ஆரோக்கியசாமி வேலுமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# காற்று மாசு நச்சை எதிர்கொள்ள...

ஐவி. நாகராஜன்

காற்று மாசு காரணமாக இந்தியாவில் ஆண்டுக்கு 16.7 லட்சம் பேர் இறக்கின்றனர். காற்று மாசு காரணமாக ரூ.2.60 லட்சம் கோடிக்கு மேல் இழப்பையும் நாடு சந்திக்கிறது என மத்திய அரசின் அமைப்பான ஐ.சி.எம்.ஆர் அறிக்கை கூறுகிறது.

நுரையீரல் நோய்களில் 40% காற்று மாசுபாடு காரணமாகவே ஏற்படுகின்றன. மாரடைப்பை ஏற்படுத்தும் இதய நோய், பக்கவாதம், சர்க்கரை நோய் மற்றும் குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே பிறந்த குழந்தைகளின் மரணம் ஆகியவற்றுக்கு 60% வரை காற்று மாசுதான் காரணம் என்று ஐ.சி.எம்.ஆர். ஆய்வு முடிவு கூறுகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின்படி நுரையீரல் புற்றுநோயால் ஏற்படும் 29 சதவீத மரணத்துக்கு காற்று மாசு காரணமாகிறது. மேலும், இதய நோயால் ஏற்படும் இறப்புகளுக்கு 2.5%-மும், சுவாச நோய்த் தொற்று இறப்புக்கு 17%-மும், பக்கவாதத்தால் ஏற்படும் இறப்புகளுக்கு 24 %-மும் காற்று மாசு காரணமாகிறது.

ஞாபக மறதி நோய் (டிமென்ஷியா), மன இறுக்கம்மற்றும்ஒருசிலநரம்பியல்கோளாறுகளுக்கு காற்று மாசு எப்படி காரணமாகிறது என்பதை ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர். ஒரு கர்ப்பிணி காற்று மாசால் பாதிக்கப்படும்போது எடை குறைந்த குழந்தை பிறப்பு, முன்கூட்டியே பிறப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

தில்லியில் ஏற்கெனவே 22 லட்சம் குழந்தைகள் நுரையீரல் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பு கருத்தின்படி தில்லியில் ஏற்படும் மாசுபாடு அளவு, கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி பக்கவாதம், இதயக் கோளாறுகள் மற்றும் நுரையீரல் புற்றுநோய்களுக்கு காரணமாகின்றன. தில்லியில் காற்று மாசால் ஏற்படும் உடல்நலக் கோளாறுகளால் ஆண்டுக்கு 10,000 முதல் 30,000 பேர் வரை இறப்பதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மாசு இல்லாத காற்றை சுவாசிக்க நமது குழந்தைகளும் எதிர்கால சந்ததிகளும் உரிமை பெற்றவர்கள். 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 93% பேருக்கு சுத்தமான மற்றும் ஆரோக்கியமானசூழலில் வளரும் உரிமை மறுக்கப்படுகிறது. குழந்தையின் ஆரோக்கியம், கல்வி மற்றும் விளையாடுவதற்கான உரிமையை காற்று மாசு பாதிக்கிறது. மேலும், மூளை வளர்ச்சிக்கும், மன ஆரோக்கியத்துக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

காற்று மாசால் புவி வெப்பமடையும். புதைபடிவ எரிபொருள்களை எரிக்கும்போது வளிமண்டலத்தில் வெளியாகும் நைட்ரஜன் ஆக்சைடு மற்றும் சல்ஃபர் ஆக்சைடுகள் மழையின்போது நீர்த்துளிகளுடன் இணைந்து அமிலங்களை உருவாக்கி அமில மழைக்கு வழிவகுக்கும். இது தாவரங்கள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தும். அத்துடன் ஓசோன் படலத்தில் சிதைவையும் ஏற்படுத்துகிறது.

மாசடைந்த காற்றில் உள்ள நச்சு ரசாயனங்கள் வன விலங்குகளைப் பாதிக்கின்றன. இதன் மூலம் அவை புதிய இடங்களுக்குச் செல்லவும், வாழ்விடங்களை மாற்றவும் கட்டாயப்படுத்தப்படுகின்றன. இது ஒரு குறிப்பிட்ட பகுதியின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் எண்ணிக்கையில் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்துகிறது.

சுவிஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கை, உலகின் மிகவும் மாசுபட்ட 50 நகரங்களில் 39 நகரங்கள் இந்தியாவில் இருப்பதாக கூறுகிறது. சிகாகோ பல்கலைக்கழகத்தின் 2023-ஆம் ஆண்டுக்கான காற்று தர வாழ்க்கை குறியீடு அறிக்கையின்படி, உலகின் இரண்டாவது மாசுபட்ட நாடாக இந்தியா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சராசரி இந்தியரின் ஆயுள்காலத்தை 5.3 ஆண்டுகள் காற்று மாசு குறைக்கும்; அதே நேரம், வட இந்தியாவில் காற்று மாசு காரணமாக அங்கு உள்ளவர்களின் ஆயுள் 8 ஆண்டுகள் குறையும் என்கிறது அந்த அறிக்கை.

உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களுடன் ஒப்பிடும்போது தில்லியில் 1.8 கோடி மக்கள் சராசரியாக 11.9 ஆண்டுகள் ஆயுள்காலத்தை இழக்கும் நிலையில் உள்ளனர். இந்தியாவில் 103 கோடி பேர், மாசு அளவில் உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலை மீறும் பகுதிகளில் வாழ்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. 1998-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாசு இப்போது 67.7% அதிகரித்துள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இந்தியாவிலும், உலகிலும் மிகவும் மாசுபட்ட நகரமாக தில்லி இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய ஆய்விலும் இந்தியாவிலேயே அதிக மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் தில்லி முதலிடத்தில் உள்ளது.

காற்று மாசு ஏற்படுத்தும் உடல்நல பாதிப்பில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள உடற்பயிற்சி அவசியம். நடைப்பயிற்சியில் ஈடுபடலாம். மிதிவண்டியைப் பயன்படுத்தலாம். ஆனால், மாசு அளவு அதிகமாக இருக்கும்போது, நடைப்பயிற்சியைத் தவிர்க்க வேண்டும்.

நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் உணவுகளை உட்கொள்ளுதல், தேவையானபோது மட்டும் வெளியே செல்வது, வெளியில் செல்லும்போது மாசு கவசங்களை அணிவது ஆகியவற்றைக் கடைப்பிடிக்கலாம்.

பயன்பாட்டில் இல்லாதபோது விளக்குகளை அணைத்து விடலாம். பொருள்களை மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல், பட்டாசு வெடிப்பதை குறைத்துக் கொள்ளுதலை கடைப்பிடிக்கலாம். ஒவ்வொருவரும் தனித்தனி வாகனத்தில் பயணம் செய்வதற்குப் பதிலாக பேருந்து, ரயில் என பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம். இதன்மூலம் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தலாம்.

வாகனங்களைச் சரியாக பராமரிக்க வேண்டும்; அவற்றை புகைக்க வைக்காதீர்கள். ஆலைகளில் பாதுகாப்பான கட்டுமானப் பணி, இயந்திரங்கள் பழுதடையாமல் பராமரித்தல், குழாய்களில் ஏற்படும் கசிவைக் கட்டுப்படுத்தல் மூலம் காற்று மாசைத் தவிர்க்க முடியும்.

நம் ஒவ்வொருவருக்கும் காற்று மாசு குறித்த விழிப்புணர்வு அவசியம். ஆலையைச் சுற்றிலும் மரங்களை வளர்ப்பதன் மூலம் காற்று மாசு குறையும்.

காற்று மாசைக் குறைக்க புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கி மாறலாம். இது மக்களின் வாழ்வுரிமை சார்ந்த பிரச்னை என அரசும், அரசியல் கட்சிகளும் புரிந்துகொள்ளும்போதுதான் தீர்வு கிடைக்கும். காற்று மாசில் இருந்து நம்மை நாமே காத்துக் கொள்ளும் முயற்சி அவசியம் தேவை.

EVA STALIN IAS

# இறங்கி வருகிறது சீனா!

ஒன்றுக்கொன்று தொடர்பில்லை என்றாலும்கூட இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஏற்பட்டிருக்கும் சமரசத்துக்குப் பின்னால், ஜோ பைடன் - ஷி ஜின்பிங் சந்திப்பின் பின்னணியை முற்றிலுமாக நிராகரித்துவிட முடியாது. அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற ஆசிய பசிபிக் பொருளாதாரக் கூட்டுறவு மாநாட்டை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சீன அதிபர் ஷி ஜின்பிங், அமெரிக்காவுக்கு வெள்ளைக் கொடி காட்டியிருக்கிறார்.

உலகின் இரு பெரு வல்லரசுகளின் அதிபர்களும் நேரில் சந்தித்துக்கொள்வது என்பது அரிதான வரலாற்று முக்கியத்துவம் பெறும் நிகழ்வு. கடந்த 10 ஆண்டுகளாகவே பெரும்பாலான பிரச்னைகளில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் காணப்படும் நிலையில், ஒவ்வோர் அதிபர் தரப்பு சந்திப்பும், உடனடி மோதல்களைத் தள்ளிப்போடுபவையாக இருந்திருக்கின்றன. கடந்த வார ஜோ பைடன் - ஷி ஜின்பிங் சந்திப்பும் அந்தப் பட்டியலில் இணைகிறது.

105 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள சர்வதேசப் பொருளாதாரத்தில் சுமார் 43 டிரில்லியன் டாலர் (அதாவது 40%) அமெரிக்காவும் சீனாவும் பங்களிக்கின்றன. அதனால், இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் எந்தவொரு பிரச்னையும் சர்வதேசப் பொருளாதாரத்தை பாதிக்கும் என்பதால் உலக நாடுகள் கடந்த வாரம் நடைபெற்ற ஜோ பைடன் - ஷி ஜின்பிங் சந்திப்பை கூர்ந்து கவனித்தன.

உலகம் எதிர்கொள்ளும் உக்ரைன், மத்திய கிழக்கு ஆசிய மோதல்கள் காரணமாக பொருளாதாரப் பின்னடைவும், மூலதனத்தின் வட்டிவிகித அதிகரிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் நடந்த சந்திப்பு என்பதால் அதன் தாக்கம் நிச்சயமாக இல்லாமல் இருக்காது.

சான்பிரான்சிஸ்கோவில் நடந்த உச்சி மாநாட்டின்போது இரண்டு வல்லரசுகளின் தலைவர்களும் தனிமையில் நான்கு மணி நேரத்துக்கும் அதிகமாக நேரில் சந்தித்து உரையாடியிருக்கிறார்கள். அமெரிக்க குடியரசின் துணை அதிபராகவும், அதிபராகவும் கடந்த 15 ஆண்டுகளில் ஜோ பைடன், சீன அதிபர் ஷி ஜின்பிங்கை பல தடவை சந்தித்திருந்தாலும், இப்போதைய சந்திப்பு சற்று வித்தியாசமானது. இதற்கு முன்பு கடந்த ஆண்டில் பாலி மாநாட்டுக்குப் பிறகு நடந்த சந்திப்பால் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்கிற பின்னணியில் இந்தச் சந்திப்பை அணுகினால் மாற்றம் புரியும்.

அமெரிக்காவைவிட இந்த சந்திப்பை பயன்படுத்திக் கொள்வதில் சீனா அதிக ஆர்வம் காட்டியது. சொல்லப்போனால், சீனாவைத் தன்னை நாடி வந்து பேச்சுவார்த்தையில் உட்காரும்படி அமெரிக்கா செய்திருக்கிறது என்றுதான் இதிலிருந்து தெரிகிறது.

அமெரிக்காவின் கொள்கைகள் சீனாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தடை போட்டிருக்கின்றன. சீனாவுக்கு முக்கியமான தொழில்நுட்பப் பகிர்தலுக்கு தடை விதித்த அமெரிக்க சட்டத்தால், சீனாவின் அடுத்தகட்ட வளர்ச்சி முடக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவைப் பகைத்துக்கொண்டு சீனாவால் தன்னை ஒரு பொருளாதார வல்லரசாக நிலைநிறுத்திக்கொள்ள முடியாத சூழலில்தான், அதிபர் ஷி ஜின்பிங் பல சமரசங்களுக்குத் தயாராகி இருக்கிறார் என்பதைச் சந்திப்பின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

உளவு பார்க்கும் சீன பலூனை கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்கா சுட்டு வீழ்த்தியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு தீவிரமாக பாதிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அமெரிக்க அவைத் தலைவர் நான்சி பெலோசி, சீனாவின் எதிர்ப்பையும் அச்சுறுத்தலையும் மீறி தைவான் விஜயத்தை மேற்கொண்டபோது, இரு நாடுகளுக்கு இடையேயான ராணுவத் தகவல் தொடர்புகளை சீனா முறித்துக்கொண்டது. தரவுகள் உள்பட பல தகவல்களையும் சீனா திருடுகிறது என்கிற எச்சரிக்கையை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் உளவுத் துறைகள் வெளிப்படுத்தியது முதலே, மேலை நாடுகள் சீனாவுடனான வர்த்தகத் தொடர்புகளைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கிவிட்டன.

இந்தப் பின்னணியில்தான் ஜோ பைடன் - ஷி ஜின்பிங் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின் முடிவில் இருநாடுகளும் மீண்டும் இருநாட்டு ராணுவத்துக்கு இடையேயான தகவல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடிவு செய்திருக்கின்றன. அதாவது தொடர்பைத் துண்டித்த சீனா, இறங்கி வந்து மீண்டும் தொடர்பில் இருக்க சம்மதித்திருக்கிறது.

தைவான் பிரச்னையிலும், அந்த நாட்டைச் சுற்றி சீனாவின் ராணுவ அதிகரிப்பு குறித்து பைடன் வலியுறுத்தி இருக்கிறார். அதிபர் ஷி ஜின்பிங், தைவான் சீனாவின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதி என்பதால், தைவானுக்கு ஆயுத உதவி வழங்கக் கூடாது என்று வலியுறுத்தினாலும், அது குறித்து பைடன் எந்தவித உத்தரவாதமும் அளிக்கவில்லை.

சந்திப்பின் இன்னொரு முக்கியமான அம்சம் ஃபென்டானைல் எனப்படும் போதை மருந்து தயாரிக்கும் ரசாயனப் பொருளின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் சீனா கைவிடுவது. அமெரிக்காவில் போதைப் பொருள்களால் ஆண்டுதோறும் பல இளைஞர்கள் உயிரிழக்கிறார்கள் என்பதால் சீனாவில் தயாரிக்கப்படும் ஃபென்டானைல் தயாரிப்பை முடக்குவது அமெரிக்காவின் அவசரத் தேவை.

'ஷி ஜின்பிங் ஒரு சர்வாதிகாரி' என்கிற தனது கருத்தில் எந்த வித மாற்றமும் இல்லை என்கிற அதிபர் ஜோ பைடனின் கூற்றிலிருந்து, அமெரிக்கா தனது நிலையை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை என்பது தெரிகிறது. அதிபர் ஜோ பைடனுடனான சந்திப்புக்குக் காட்டிய அதே முக்கியத்துவத்தை, அமெரிக்க தொழிலதிபர்களுடனான சந்திப்புக்கும் காட்டியதிலிருந்து சீன அதிபர் ஷி ஜின்பிங், தனது நாட்டின் பொருளாதாரத் தடுமாற்றத்தை மீட்டெடுக்க முனைப்புக் காட்டுவது வெளிப்படுகிறது.

அமெரிக்க அரசுடன் மட்டுமல்லாமல், அமெரிக்க தொழிலதிபர்களுடனான உறவையும் தக்கவைத்துக்கொள்வதில் இந்தியா கவனம் செலுத்த வேண்டிய தருணம்!

# WOMEN'S PREMIER LEAGUE மும்பையில் டிசம்பர் 9-இல் மகளிர் பிரீமியர் லீக் ஏலம்

புது தில்லி, நவ. 24: மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் 2-ஆவது சீசனுக்கான வீராங்கனைகள் ஏலம், டிசம்பர் 9-ஆம் தேதி மும்பையில் நடைபெறவுள்ளதாக பிசிசிஐ வெள்ளிக்கிழமை அறிவித்தது.



இந்தியாவில் ஆடவருக்கான ஐபிஎல் போட்டியின் பிரபலத்தை அடுத்து, அந்தப் போட்டியுடனேயே மகளிருக்கான டி20 சேலஞ்ச் போட்டி 2019 முதல் 2022 வரை நடைபெற்றது. பின்னர் அந்தப் போட்டியை ஐபிஎல்-க்கு நிகராக, விரிவான ஒன்றாக மகளிர் பிரீமியர் லீக் என்ற கிரிக்கெட் போட்டியாக நடத்த பிசிசிஐ 2022-இல் முடிவு செய்தது.

அதன் பேரில் நடப்பாண்டில், 5 அணிகளுடன் நடைபெற்ற அந்தப் போட்டியின் அறிமுக சீசனில் மும்பை இண்டியன்ஸ் சாம்பியன் ஆனது. இந்நிலையில், அதன் 2-ஆவது சீசன் அடுத்த ஆண்டு பிப்ரவரி - மார்ச்சில் நடைபெற இருப்பதாகத் தெரிகிறது. அதற்கான வீராங்கனைகள் ஏலம் வரும் டிசம்பர் 9-ஆம் தேதி மும்பையில் நடைபெற இருக்கிறது.

இதை யொட்டி, அந்த 5 அணிகளும் தக்கவைத்துக் கொண்ட, விடுவித்த வீராங்கனைகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

மொத்தமாக 60 வீராங்கனைகளை அந்த வீராங்கனைகள் தக்கவைத்துக் கொண்டுள்ளதில் 21 பேர் வெளிநாட்டவர்களாவர். மொத்தமாக 29 வீராங்கனைகள் அந்த அணிகளால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**டெல்லி கேப்பிட்டல்ஸ்**

தக்கவைக்கப்பட்டவர்கள்: ஆலிஸ் கேப்சி, அருந்ததி ரெட்டி, ஜெமிமா ரோட்ரிக்ஸ், ஜெஸ் ஜோனசென், லௌரா ஹாரிஸ், மாரிஸேன் காப், மெக் லேனிங், மின்னு ராணி, பூனம் யாதவ், ராதா யாதவ், ஷஃபாலி வர்மா, ஷிகா பாண்டே, ஸ்னேஹா தீப்தி, தானியா பாட்டியா, டைட்டஸ் சாது.

விடுவிக்கப்பட்டவர்கள்: அபர்ணா மோந்தல், ஜாசியா அக்தர், தாரா நோரிஸ்.

**குஜராத் ஜயன்ட்ஸ்**

தக்கவைக்கப்பட்டவர்கள்: ஆஷ்லே கார்ட்னர், பெத் மூனி, தயாளன் ஹேமலதா, ஹார்லீன் தியோல், லௌரா வோல்வார்ட், ஷப்னம் ஷகீல், ஸ்னேஹ ராணா, தனுஜா கன்வர்.

விடுவிக்கப்பட்டவர்கள்: அனபெல் சதர்லேண்ட், அஸ்வனி குமாரி, ஜார்ஜியா வேர்ஹாம், ஹர்லி காலா, கிம் கார்த், மான்சி ஜோஷி, மோனிகா படேல், பருனிகா சிசோடியா, சபினேனி மேக்னா, சோஃபியா டங்க்லி, சுஷ்மா வர்மா.

**மும்பை இண்டியன்ஸ்**

தக்கவைக்கப்பட்டவர்கள்: அமன்ஜோத் கௌர், எமிலியா கெர், க்ளோ டிரையான், ஹர்மன்பிரீத் கௌர், ஹேலி மேத்யூஸ், ஹுமாய்ரா காஸி, இசபெல் வாங், ஜிந்திமனி கலிதா, நேட் ஸ்கீவர், பூஜா வஸ்த்ரகர், பிரியங்கா பாலா, சாய்கா இஷாக், யஸ்திகா பாட்டியா.

விடுவிக்கப்பட்டவர்கள்: தாரா குஜ்ஜர், ஹீதர் கிரஹாம், நீலம் பிஸ்த், சோனம்.

**ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்**

தக்கவைக்கப்பட்டவர்கள்: ஆஷா ஷோபனா, திஷா கசத், எலிஸ் பெரி, ஹீதர் நைட், இந்திராணி ராய், கனிகா அஹுஜா, ரேணுகா சிங், ரிச்சா கோஷ், ஷ்ரேயங்கா பாட்டீல், ஸ்மிருதி மந்தனா, சோஃபி டிவைன்.

விடுவிக்கப்பட்டவர்கள்: டேன் வான் நீகெர்க், எரின் பர்ன்ஸ், கோமல் ஜன்ஸத், மீகன் ஷட், பூனம் கெம்னார், பிரீத்தி போஸ், சஹானா பவார்.

**யுபி வாரியர்ஸ்**

தக்கவைக்கப்பட்டவர்கள்: அலிசா ஹீலி, அஞ்சலி சர்வனி, தீப்தி சர்மா, கிரேஸ் ஹாரிஸ், கிரண் நவ்கிரே, லௌரென் பெல், லக்ஷ்மி யாதவ், பார்ஷவி சோப்ரா, ராஜேஷ்வரி கெய்க்வாட், யஷஸ்ரீ, ஸ்வேதா ஷெராவத், சோஃபி எக்லஸ்டோன், டாலியா மெக்ராத்.

விடுவிக்கப்பட்டவர்கள்: தேவிகா வைத்யா, ஷப்னிம் இஸ்மாயில், ஷிவாலி ஷிண்டே, சிம்ரன் ஷேக்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மகளிர் 'ஏ' கிரிக்கெட்: மின்னு மணி இந்திய கேப்டன்

**பெங்களூரு, நவ. 24:** இங்கிலாந்து மகளிர் 'ஏ' அணியுடன் சர்வதேச டி20 கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கும் இந்திய மகளிர் 'ஏ' அணியின் கேப்டனாக கேரளத்தின் மின்னு மணி வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டார்.

இதன் மூலம், இந்திய 'ஏ' அணியை வழிநடத்தும் முதல் கேரள வீராங்கனை என்ற பெருமையை அவர் பெறுகிறார். கடந்த ஜூலை மாதம் வங்கதேசத்துக்கு எதிரான டி20 தொடரின் மூலம் மின்னு மணி சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார்.

நடப்பாண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்ற இந்திய அணியிலும் அவர் இடம் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்திய அணிக்காக 4 ஆட்டங்களில் விளையாடியிருக்கும் மின்னு மணி, அவற்றில் 5 விக்கெட்டுகள் சாய்த்திருக்கிறார்.

இந்தியா வரும் இங்கிலாந்து மகளிர் 'ஏ' அணி, 3 ஆட்டங்கள் கொண்ட டி20 தொடரில் விளையாட இருக்கிறது. நவம்பர் 29, டிசம்பர் 1 மற்றும் 3-ஆம் தேதிகளில் இந்த ஆட்டங்கள் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ளன.




**இந்திய 'ஏ' அணி**

மின்னு மணி (கேப்டன்), கனிகா அஹுஜா, உமா சேத்ரி, ஷ்ரேயங்கா பாட்டீல், திரிஷா, விருந்தா தினேஷ், திவ்யா, ஆருஷி கோயல், திஷா கசத், ராஷி கனோஜியா, மனத் காஷ்யப், அனுஷா பரெட்டி, மோனிகா படேல், காஷவீ, ஜிந்திமணி கலிதா, பிரகாஷிகா நாயக்.

# உலக துப்பாக்கி சுடுதல்: அனீஷுக்கு வெண்கலம்




**தோஹா, நவ. 24:** கத்தாரில் நடைபெறும் ஐஎஸ்எஸ்எஃப் உலகக் கோப்பை ஃபைனல் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் அனீஷ் பன்வாலா, 25 மீட்டர் ரேப்பிட் ஃபயர் பிஸ்டல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் இந்தப் பிரிவில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் அனீஷ் பன்வாலா 27 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தார்.

இந்தப் போட்டியில் பதக்கம் வென்றதன் மூலம், நடப்பாண்டு சீசனை அனீஷ் பன்வாலா சிறப்பானதாக நிறைவு செய்துள்ளார். முன்னதாக, ஐஎஸ்எஸ்எஃப் உலகக் கோப்பை போட்டி, ஆசிய சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் பதக்கம் வென்றதுடன், 2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் அவர் தகுதிபெற்றது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# எண்ம தொழில்நுட்பத்தில் வலிமையான தேசம் இந்தியா!

**சென்னை, நவ. 24:** எண்ம தொழில்நுட்ப (டிஜிட்டல்) கட்டமைப்பில் வலிமையான தேசமாக இந்தியா விளங்குவதாக டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் தெரிவித்தார்.

'பிகேஎஃப் ஸ்ரீதர் அண்ட் சந்தானம்எல்எல்பி தணிக்கை நிறுவனத்தின் 45-ஆவது ஆண்டு விழா சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் அந்நிறுவனத்தின் தலைவர் சந்தானகிருஷ்ணன், துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். விழாவில், டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் பேசியது:

அறிவியல், தொழில்நுட்பம், மனித வளம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்திய தேசம் மேம்பட்டு வருவதன் பயனாக பொருளாதாரமும் குறிப்பிடத்தக்க உயர்வை எட்டியுள்ளது.

நிலக்கரிக்கு மாற்றான எரிசக்தியைப் பயன்படுத்திக் கொள்வதில் பிற நாடுகளுக்கு பல்வேறு இடர்கள் உள்ளன. ஆனால், இந்தியாவைப் பொருத்தவரை அப்படியில்லை. சொல்லப்போனால், நமது நாடு மட்டும்தான் நிலக்கரிக்குப் பதிலாக சூரிய ஆற்றல் (சோலார்), ஹைட்ரஜன், காற்றாலை எரிசக்தியில் அதிக முதலீடுகளை முன்னெடுத்து வருகிறது.

அதேபோன்று வாகன எரிசக்தியைப் பொருத்தவரை தற்போது எரிவாயு பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் இங்கு உள்ளது. அதேபோன்று மின்சார வாகனப் பயன்பாடும் வேகமாக அதிகரிக்க உள்ளது. அதற்கான மின்னூட்ட (சார்ஜிங்) கட்டமைப்பு உள்ளிட்ட வசதிகள் மேம்பட வேண்டும். அவை விரைவில் சாத்தியமாகும்.

மற்றொருபுறம் செயற்கை நுண்ணறிவு நுட்பங்கள் துரித வளர்ச்சியை எட்டி வருகின்றன. அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஆற்றல், ஒருங்கிணைந்த இணையக் கட்டமைப்பு (கிளவுட் கம்ப்யூட்டிங்), கைப்பேசி அலைவரிசை சேவை ஆகியவை ஒருசேர கிடைக்கப் பெறும்போது அனைவரும் செயற்கை நுண்ணறிவு நுட்பத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை உருவாகும்.

எண்ம தொழில்நுட்ப (டிஜிட்டல்) கட்டமைப்பு மற்றும் இளைஞர்களின் திறன் ஆகியவை இந்தியாவின் மிகப் பெரிய பலமாக விளங்குகிறது. புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு அவை உந்துசக்தியாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மின்னணுவியல்,பாதுகாப்புத் துறை, மின்கலன், மருந்தியல் உள்பட பல்வேறு துறைகளில் உலகளாவிய விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் இந்தியாவுக்கு பெரும் வாய்ப்புகள் உருவாகியுள்ளன என்றார் அவர்.

முன்னதாக, டாடா சன்ஸ் நிறுவனச் செயல் தலைவர் என்.சந்திரசேகரன் சிறந்த சமூக சேவகர் பிரீத்தி ஸ்ரீனிவாசனை கௌரவித்தார்.



சென்னையில் பிகேஎஃப் ஸ்ரீதர் அண்ட் சந்தானம் கணக்குத் தணிக்கை நிறுவனத்தின் 45- ஆவது ஆண்டு விழாவில் சிறந்த சமூக சேவகர் பிரீத்தி ஸ்ரீனிவாசனை கௌரவித்த டாடா சன்ஸ் நிறுவனச் செயல் தலைவர் என்.சந்திரசேகரன். உடன், கணக்குத் தணிக்கை நிறுவனத்தின் நிறுவனர் சந்தானம்.